


# தாமரை
# தரம்-8ª (2017)
## சஞ்சிகைஆக்கம்



குழு உறுப்பினர்கள்

- ❖ த.அபிஷன்
- ❖ சூ.வேணுஷன்
- ❖ ப.விதுர்சன்
- ❖ தி.விதுஜன்
- ❖ ப.கோகுலதாஸ்
- ❖ சி.வசிகா
- ❖ து.அக்சனா
- ❖ ம.அபினா
- ❖ மி.சுபேதிகா
- ❖ வே.ஜிந்துசா
- ❖ பா.டிலக்சனா





# உள்ளடக்கம்


01. பாடல்கள்

I. கூண்டிற்கிளி ---------→ 01
II. வெண்ணிலா ---------→ 02
III. நாட்டார் பாடல் ---------→ 03
IV. தேனியும் குளவியும் ---------→ 04

02. கவிதைகள்

I. பாரதி தாசன் கவிதைகள் ---------→ 05
II. பழமொழி நானூறு, நளவெண்பா ---------→ 06

03. சொற்களும் கருத்தும்

I. ஒத்த சொற்கள் ---------→ 07
II. எதிர்ச் சொற்கள் ---------→ 08
III. அரும்பதங்கள் ---------→ 09
IV. ஒலி வேறுபாட்டுச் சொற்கள் ---------→ 10
V. தொனி மரபுப் பெயர்கள் ---------→ 11
VI. இளமைப் பெயர்கள் ---------→ 12
VII. எழுத்து வழு நீக்கல் ---------→ 13


04. தொடர்கள்

I. உவமைத் தொடர்கள் ---------→ 14
II. மரபுத் தொடர்கள் ---------→ 15
III. இணைமொழிகள் ---------→ 16
IV. ஆத்திசூடி ---------→ 17-20
V. இரட்டைக்கிளவி ---------→ 21
VI. பழமொழிகள் ---------→ 22-23
VII. பொன்மொழிகள் ---------→ 24
VIII. திருக்குறள் ---------→ 25
IX. அடுக்குத் தொடர்கள் ---------→ 26

05. வினாவிடைகள்

I. விடுகதைகள் ---------→ 27
II. பொது அறிவு ---------→ 28
III. முக்கியமானவொன்று ---------→ 29
IV. கடிதத்தின் அமைப்பு ---------→ 30
V. எதிர்ப் பால் சொற்கள் ---------→ 31
VI. கலைச் சொற்கள் ---------→ 32

06. கதைகள்

# கூண்டுக் கிளி

பவளம்




பச்சைக் கிளியே நீ பாடாயோ
பவளம் என்று கூறாயோ
கொச்சி மிளகாய் தின்றன்ன
கொய்யாப்பழமும் தருகின்றேன்

உன்னைக் கண்டுல் இருக்கின்றாய்
உணவைத்தின் மேலே நடிக்கின்றாய்
கண்ணில் நீரை நிறைக்கின்றாய்.
கவலை உனக்கும் ஏதுண்டோ

கிளி

அடிமை வாழ்வு இழிவன்றோ
அன்புக்காக்கி சொல்லவும்
கொடிய சிறையில் வைத்தென்னைக்
கொல்லுகின்றாய் நல்லதோ

பவளம்



கூட்டில் உங்கள் இனத்தினைக்
கொண்டடைத்தல் கொடியது
காட்டில் வானில் பறந்து நீ
காணும் இன்பம் பெரியது

பவளம் கூட்டைத் திறந்தனன்
பச்சைக் கிளியும் பறந்தது
அவளும் வானைப் பார்த்தனள்
அன்புக் கிளியும் கேட்டது

ஆக்குவான் க. வேந்தன்

# வெண்ணிலா

விண்ணில் மின்னும் மீன்களிடை
விளங்கும் நல்ல வெண்ணிலவே
மண்ணில் மக்கள் மகிழ முழு
மதியாய் என்றும் வாராயோ?



நிலவே நீயும் நீள்வானில்
நிலவுவதால் நிலவென்றாரோ?
உலகோர் உவக்க ஒளி தந்து
உலவும் உனக்கேன் உருமாற்றம்

வழியே உன்னை கார்மேகம்
வந்து மறைப்பது அநியாயம்!
எழில் மிகு தண்மதி உன் மீது
எரிச்சல் ஏன்தான் கொண்டதுவோ?

நல்லது செய்ய வேண்டுமென
நாடிச் சேவை செய்வார்க்கு
தொல்லை துன்பம் தடையெல்லாம்
தோன்றும் தெரிந்து நீ உண்மை!

மாலை வேளை வந்திடுவாய்
மனதுக் கினிமை தந்திடுவாய்
அமுதம் போல ஒளி தருவாய்
அழகுக் குளுமை அளித்திடுவாய்

# நாட்டார் பாடல்

வானம் கறுக்க வேணும் - மழை
வயல் காடெல்லாம் பெய்ய வேணும்
தேனான சம்பா நெல்லு நம்ம
தேசம் எல்லாம் விளைய வேணும்

கட்டாந் தரைகளெல்லாம் நல்ல
காய்கனிகள் விளைய வேணும்
மட்டாக நாமும் உண்டு - நாடு
மக்களுக்கும் ஈய வேண்டும்.

தூரத்து நாட்டாரிடம் - நாமும்
தாழ விட்டு உணவு கேட்கும்
பாரத்தை போக்குவதற்கு - நாம்
பாடுபட்டு உழைக்க வேணும்

முத்து வெள்ளைச் சம்பா நெல்லு
முற்றி விளைந்து குலுங்குதடா
கத்துங் கிளி குருவியெல்லாம் வந்து
கூட்டாய் எங்கும் கொத்துதடா

பஞ்சம் பறக்க வேணும் - எங்கும்
பலகலைகள் சிறக்க வேண்டும்
கஞ்சிக்கு அலையும் இந்த கெட்ட
கஞ்சல் வாழ்க்கை ஒழிய வேண்டும்.

# தேனீயும் குளவியும்

தேனீயாரே தேனீயாரே - அன்பு
திரியாத தம்பியாரே
பேரொன்று கூறிடுவேன் - அதை
கண்டவுடன் கேட்டிடுவீர்.

பொன்னை வென்ற நின்னிறமும் - நல்ல
புள்ளிகளு முள்ளனவும்
எண்ணமிந்த மானிடர்கள் - எல்ல
என்றுஉரே நிங்குரைப்பாய்

உருவத்தில் நீ யொவ்வுவையோ - என்னை
யுடல் வண்ணத்தில் ஒவ்வுவையோ
பருமை தனில் ஒவ்வுவையோ - என்னைப்
பார்க்க அவர் கூசுவதேன்

குளவியாரே குளவியாரே - எங்கள்
குலத்தினில் மூத்தவரே
தெளிவுறச் சாயவுடல
சொல்லுவாரே கேட்டிடுவீர்

கூடு கட்டுந் தொழிலொழும் - மற்றக்
குறி குறிகுணங்கள் தம்மாலும்
நாடிலெம் மிற் பெருமையில்லை - என்னை
நல்லனெனுங் காரணங்கள்

கொட்டுதலில் நின்போலும் - யான்
கொடியோனும் அல்ல - கண்டாய்
பட்டப் பகல் தோறுமவர் - நாளும்
பணித்தேன் யான் சேர்த்திடுவன்

யான் சேர்க்கும் தேனையெல்லாம் - அவர்
இன்பமா யெடுத்தவார்
தேன் சேர்க்கு மாண்பையன்றோ - என்னை
நினைமுமவர் போற்றுவார்

# பாரதி தாசன் கவிதை

பாட்டு:-> 25

## தமிழ்க்காதல்

கமலம் அடுக்கிய தென்னந்தழையால் - மலர்க்
காட்டினில் ஊன்றின் கிளைவளர்த்தால்
கமழ் தரு தென்றல் சிலர் சிலர்ப்பால் - கருந்
கண்மலரால் முல்லை வெண்ணகைப்பால்
அணையும் அன்னங்களின் மென்னடையால் - மயில்
ஆட்டத்தினால் தளிர் ஓட்டத்தினால்
கனையும் அருவி - அப்பூஞ்சோலை - எனைத்
தன்வசம் ஆக்கிவிட்டான் ஒரு நாள்

சோலை அணிந்தொரு திண்ணையிலே - நான்
தோளினை ஊன்றி இருக்கையிலே
சோலை நிகர்த்த உரியுடையாள் - என்றன்
செந்தமிழ் பத்தினி வந்துவிட்டாள்
சோலையெல்லாம் இனி வாழையெல்லாம் நல்ல
தோகையர் கூட்டமெல்லாம் இனிக்கும்
கோல இன்பத்தையென் உள்ளத்திலே - வந்து
கொட்டி விட்டாள் எனைத் தொட்டிழுத்தாள்

# பழமொழி நானூறு

அருவினை மான் கலனும் இன்ற பொருளும்
திருவுடையராயின் திரிந்தும் வருமாய்
பெருவரை நாட! பரிவின் மகனாய்
திருவுறும் திப்பம் பெறும்



குறிப்பு :- (செல்வம் தீயோரிடத்தும் சேர்வதால் அதனை விரும்பாத உறுதியுடன் அறநெறியில் இருக்க வேண்டும்)

# நள வெண்பா

அறம் பிழைத்தார் பொய்த்தார் அருள்சிதைத்தார் மாயத்
திறம் பிழைத்தார் செம்மை இழந்தார் புறங்கடையில்
சென்றார் புகு நரகம் சேர்வாய் கொல் என்றழியா
நின்றான் விதியை நினைத்து

குறிப்பு :- (பாவிகள் போய்ச் சேர்கின்ற நரகத்தினை நீயும் சென்று அடைவாய் போலும்! என்று கலியைக் குறித்து கண்ணீர் தன் உள்ளம் அழிந்தவனாக தமயந்தி தனக்குற்ற விதியை நினைத்து சோர்ந்து கொண்டவனாக மயந்தி நின்றான்)

# கவிதைகள்

புன்னகை செய்யும்
பூக்கள் போதாது
புண்ணியம் செய்யும்
பூமி வேண்டும்!
விலையான கற்கள்
போதாது

சுவையான கல்வி
வேண்டும்
சுட்டெரிக்கும் சூரியன்
போதாது
சுகமான நிலவும்
வேண்டும்

அன்னை என்னும்
மூன்றெழுத்தால் பிறந்தோம்
அன்பு என்னும்
மூன்றெழுத்தால் வளர்ந்தோம்
பள்ளி என்னும்
மூன்றெழுத்தில் சேர்ந்தோம்
கல்வி என்னும்
மூன்றெழுத்தைக் கற்றோம்
போட்டி என்னும்
மூன்றெழுத்தினை அடைந்தோம்
சாதனை என்னும்
மூன்றெழுத்தைச் சந்தித்தோம்



நல்ல தொழுகையை நம்மைத் தொழும் வகையே
உலக இறையோன் வகுத்தியதால் சொல்லுந்
திருமறையின் கூற்றைத் தெளிந்தே மனதில்
உருகித் தொழுவீர் உணர்ந்து

உத்தம மெய்ஞ்ஞானம் ஊற்று திருமறையால்
முத்தி பெற்று உய்க முன்னவனாம் - சுத்தன்
ஸதிக'ச றமழான் மாதத்தை ஆற்ற
கதிக்குயர் மாட்சியைக் காண்

# ஒத்த கருத்து சொற்கள்

1. தவறு - குற்றம்
2. தடாகம் - குளம்
3. செவி - காது
4. சூரியன் - கதிரவன்
5. ஆராதனை - வணக்கம்
6. ஆசி - வாழ்த்து
7. அவை - சபை
8. நிறம் - வண்ணம்
9. அழுக்காறு - பொறாமை
10. ஆசாரம் - ஒழுக்கம்
11. பதுமம் - தாமரை
12. ஆயுள் - வாழ்நாள்
13. ஆணை - சத்தியம்
14. பந்தம் - உறவு
15. ஆர்வம் - விருப்பம்
16. இரை - உணவு
17. இகல் - பகை
18. ஆலம் - விடம்
19. கோள் - கிரகம்
20. சக்தி - ஆற்றல்
21. நெருப்பு - தீ
22. கோசம் - முட்டை
23. சமாதி - கல்லறை
24. இரதம் - தேர்
25. புத்தகம் - நூல்
26. பிரபஞ்சம் - உலகம்
27. இறுதி - முடிவு
28. இரத்தம் - குருதி
29. பரிசு - கொடை
30. பிழை - தவறு
31. மறியல் - சிறை
32. மனை - வீடு
33. புரம் - ஊர்
34. பூதலம் - பூமி
35. ஓதல் - படித்தல்
36. பையன் - சிறுவன்
37. ஊதல் - காற்று
38. ஒளி - வெளிச்சம்
39. மெய் - உடல்
40. வருடம் - ஆண்டு
41. வதனம் - முகம்
42. மோகனம் - மயக்கம்
43. வர்ணம் - நிறம்
44. வாயு - காற்று
45. விண் - ஆகாயம்
46. கருவி - உபகரணம்
47. மரபு - முறைமை.

# எதிர்க் கருத்து சொற்கள்

1. அகம் - புறம்
2. அன்பு - வன்பு
3. அறம் - புறம்
4. ரூபம் - அரூபம்
5. அல் - பகல்
6. அகலாங்கு - நெட்டாங்கு
7. ஆக்கம் - கேடு
8. இசை - வசை
9. ஈதல் - ஏற்றல்
10. உக்கிரம் - சாந்தம்
11. இலாபம் - நட்டம்
12. ஆதரவு - நிராதரவு
13. ஆரம்பம் - முடிவு
14. இன்னார் - இனியார்
15. அந்தம் - ஆதி
16. அசல் - நகல்
17. ஈரம் - வரட்சி
18. ஆயுதன் - நிராயுதன்
19. ஆசாயம் - அநாயாசம்
20. அமைதி - குழப்பம்
21. உத்தமன் - அதமன்
22. வள்ளல் - உலோபி
23. உவத்தல் - காய்தல்
24. ஐது - செறிவு
25. ஒற்றுமை - வேற்றுமை
26. கனவு - நனவு
27. காலம் - அகாலம்
28. குற்றம் - குணம்
29. அண்மை - சேய்மை
30. சுரர் - அசுரர்
31. நட்பு - பகை
32. வெற்றி - தோல்வி
33. மேடு - பள்ளம்
34. இரவு - பகல்
35. சிறுமை - பெருமை.
36. நவீனம் - புராதனம்
37. செல்வம் - வறுமை
38. கோபம் - சாந்தம்
39. பேதம் - அபேதம்
40. வலம் - இடம்
41. வள்ளல் - உலோபி
42. வாழ்வு - தாழ்வு
43. வினா - விடை
44. வரவு - செலவு
45. வானம் - பூமி
46. கீர்த்தி - அபகீர்த்தி
47. ஏற்றம் - இறக்கம்
48. இறுக்கு - நெருக்கு

# அரும்பதங்கள்

1) வாய்மை - உண்மை
2) ஆரிவாரல் - அரவணைப்பு
3) மருட்கை - வியப்பு
4) அவதி - துன்பம்
5) காமுறுதல் - விரும்புதல்
6) எள்ளல் - இகழ்ச்சி
7) பொறிகள் - இயந்திரம்
8) இடைஞ்சல் - தடை
9) கௌவுதல் - பிடித்தல்.
10) புசிக்கவோ - உண்ணவோ
11) கொம்பு - கிளை
12) சுயபுராணம் - சொந்தக்கதை
13) சாதம் - சோறு
14) இழவு - - சாவு
15) சேனை - படை
16) விரோதமாக - எதிராக
17) குடியானவர் - மக்கள்
18) ஐயப்பாடு - சந்தேகம்
19) ஈடேற - நிறைவேற
20) தசாப்தம் - பத்தாண்டு
21) பாரிய - பெரிய
22) அறைவனா - அரிப்புவனா
23) துவாம்பரம் - வெளிப்படை
24) துலங்குதல் - விளங்குதல்
25) வேட்கை - ஆவல்
26) கரவன்றி - மறைவன்றி
27) சீவராசிகள் - உயிரினம்
28) பனி - நீராவாய்
29) விழுப்பம் - மேன்மை
30) ஞாலம் - உலகம்
31) சேய் - குழந்தை
32) வேட்கை - விருப்பம்
33) மாசற்ற - குற்றமற்ற
34) அன்னம் - சோறு
35) திப்பியம் - சுவர்க்கம்
36) உண்டி - உணவு
37) பீடிகை - பீடம்
38) அங்கை - உள்ளங்கை

# ஒரு பொருள் பல சொல்

01) அன்பு :- பாசம், நேசம், கருணை
02) சந்தோசம் :- இன்பம், உவகை, மகிழ்ச்சி
03) உடல் :- உடம்பு, மேனி, சரீரம்
04) துன்பம் :- இன்னல், அல்லல், துயரம்
05) உலகம் :- வையகம், தரணி, அவனி
06) சூரியன் :- ஞாயிறு, பகலோன், பரிதி
07) சந்திரன் :- திங்கள், அம்புலி, வான்மதி
08) நட்சத்திரம் :- விண்மீன், தாரகை, வெள்ளி
09) வானம் :- ஆகாயம், விண், விசும்பு
10) மன்னன் :- அரசன், வேந்தன், கோன்
11) காடு :- கானகம், அடவி, வனம்
12) நித்திரை :- துயில், உறக்கம், சயனம்
13) சோறு :- அன்னம், அடிசில், அமுது
14) வீடு :- மனை, இல்லம், அகம்
15) குழந்தை :- குழவி, சிசு, மகவு
16) விருப்பம் :- ஆசை, வேட்கை, பற்று
17) புத்தகம் :- ஏடு, பனுவல், நூல்
18) நெருப்பு :- அக்கினி, அனல், தழல்
19) கடல் :- சாகரம், பரவை, சமுத்திரம்
20) மலை :- வரை, குன்று, பூதரம்

# ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

01) முருகு :- அழகு, தேன்

02) முறுகு :- திண்மை, முறுகல்

03) திரை :- அலை, திரைச்சீலை

04) திறை :- கப்பம், அரசிறை

05) நரை :- மூப்பு, வெளுத்தமயிர்

06) நறை :- தேன், குற்றம்

07) தரு :- ஒதுங்கு, பசுக்கூட்டம்

08) தறு :- நிறைவு, நிறைத்தலைவு

09) செரு :- களிம்பு, குற்றம்

10) செறு :- நெருக்கம், செண்மை

11) தெரியல் :- உடல், போர்

12) தெறியல் :- வயல், கோபம்

13) தெரல் :- பூமாலை, சிதறல்

14) தெறல் :- தெளிவு, கள்

15) கிரி :- மலை, குன்று

# ஒலி மரபுப் பெயர்

01) அணில் - கீச்சிடும்

02) எருது - எக்காளமிடும்

03) குதிரை - கனைக்கும்

04) பாம்பு - சீறும்

05) பல்லி - சொல்லும்

06) தவளை - கத்தும்

07) நரி - ஊளையிடும்

08) யானை - பிளிறும்

09) பன்றி - உறுமும்

10) பூனை - கத்தும்

11) கரடி - கதறும்

12) பசு - கதறும்

13) நாய் - குரைக்கும்

14) ஓநாய் - ஊளையிடும்

15) சிங்கம் - கர்ச்சிக்கும்

16) புலி - உறுமும்

17) குரங்கு - அலப்பும்

18) கோழி - கொக்கரிக்கும்

19) சேவல் - கூவும்

20) மயில் - அகவும்

21) காகம் - கரையும்

22) தேனீ - ரீங்காரமிடும்

# இளமைப் பெயர்

01) ஆடு => குட்டி

02) மாடு => கன்று

03) நாய் => குட்டி, பறழ்

04) சிங்கம் => குட்டி, குருளை

05) யானை => கன்று, போதகம், குட்டி

06) மான் => கன்று, குட்டி

07) பாம்பு => குட்டி

08) கரடி => குட்டி

09) புலி => குட்டி

10) பூனை => குட்டி, பறழ்

11) ஒட்டகம் => கன்று

12) எருமை => கன்று

13) குரங்கு => குட்டி, பறழ்

14) குதிரை => குட்டி

16) அணில் => பிள்ளை, குஞ்சு

17) மீன் => குஞ்சு

18) கிளி => பிள்ளை

19) தவளை => பேத்தை

20) கோழி => குஞ்சு

21) காகம் => குஞ்சு

# எழுத்து வழு நீக்கி எழுதுதல்

வெய்யால் - வெயால்
காச்சல் - காய்ச்சல்
முயற்ச்சி - முயற்சி
துறப்பு - திறப்பு
தேள்வை - தேவை
வேர்வை - வியர்வை
வைக்கல் - வைக்கோல்
கிணத்தடி - கிணற்றடி
அருவாள் - அரிவாள்
கொடாலி - கோடரி
இளணி - இளநீர்
சிவர் - சுவர்
சிவை - சுவை
சமயல் - சமையல்
கட்டிடம் - கட்டடம்
புடவை - புடைவை
நாப்பது - நாற்பது
முன்னூறு - முந்நூறு
ஆராட்சி - ஆராய்ச்சி
நாநூறு - நானூறு
கம்மனி - கம்பனி
நோம்பு - நோன்பு
புட்டு - பூட்டு
போயிலை - புகையிலை
ஒட்டறை - ஒட்டடை
தெண்டம் - தண்டம்
பரிட்ச்சை - பரீட்சை
சிகப்பு - சிவப்பு
கவச்சி - கவர்ச்சி
எழுட்சி - எழுச்சி

உயச்சி - உயர்ச்சி
பயிட்சி - பயிற்சி
வரட்ச்சி - வறட்சி
சமுகம் - சமூகம்
மசாலம் - மச்சாலம்
கோவால் - கோயால்
கச்சி - கட்சி
புகட்சி - புகழ்ச்சி
மலட்சி - மலர்ச்சி
ஒம்பது - ஒன்பது
உயர்ட்சி - உயர்ச்சி
கருப்பு - கறுப்பு
ஏக்கல் - ஈர்க்கு
ஊதமம் - ஊதம்
துடம்பி - தும்பி
அறிஞ்சர் - அறிஞர்



# உவமைத்தொடர்

01) நீரின் மேல் எழுத்துப் போல :- நிலையற்ற தன்மை

02) சூரியனைக் கண்ட பனி போல - மறைதல்

03) நகமும் சதையும் போல - ஒற்றுமை

04) பசுமரத்தாணி போல - நிலையான தன்மை

05) பூவும் மணமும் போல - பிரியாத தன்மை

06) உடும்புப் பிடி போல - விடாப்பிடி

07) அத்தி பூத்தாற் போல - மிக அரிது

08) சிலையில் எழுத்துப்போல - நிலையானது

09) கல்லின் மேல் எழுத்துப்போல - நிலையானது

10) கீரியும் பாம்பும் போல - பகை உணர்வு

11) காட்டில் எரியும் நெருப்பு போல - பிரயோசனமற்றது

12) உயிரும் உடலும் போல - ஒற்றுமை

13) நீறு பூத்த நெருப்பு போல - மறைவான நிலை

14) சிறகிழந்த பறவை போல - ஆதரவற்ற நிலை

15) சூரியனைக் கண்ட தாமரை போல - மகிழ்ச்சி

16) விழலுக்கிறைத்த நீர் போல - பயனற்ற தன்மை

17) நுனிப்புல் மேய்ந்தது போல - மேலோட்டமாக செய்தல்

18) வைக்கோல் பட்டடை நாய்போல - பயனற்ற நிலை


19) தூண்டிலில் மீன் போல - மீளமுடியாத துயர்

20) நீர் மேல் குமிழி போல - நிலையற்ற தன்மை.

21) ஓடும் புளியம்பழமும் போல - ஒற்றுமை.

# மரபுத்தொடர்கள்

01) அடியொற்றுதல் - பின்பற்றுதல்
02) அடியிடுதல் - ஆரம்பித்தல்
03) அடி நகர்தல் - இடம் பெயர்தல்
04) கண் திறத்தல் - அறிவுண்டாதல்
05) கண் மலர்தல் - விழித்தல்
06) கண் வளர்தல் - நித்திரை செய்தல்
07) கண் அயர்தல் - நித்திரை செய்தல்
08) கண் படுதல் - இரங்குதல்
09) கண் ஓடுதல் - எதிரே நிற்றல்
10) கண்ணிறத்தல் - இறத்தல்
11) கண் மூடுதல் - நம்பிக்கைத் துரோகம்
12) கழுத்தறுத்தல் - செய்தி பரவுதல்
13) காதிலடிபடல் - ஏமாற்றுதல்
14) காது குத்துதல் - ஓடுதல்
15) கால் கிளறுதல் - தடைப்படுதல்
16) கால் பின்னுதல் - ஓய்வெடுத்தல்
17) கால் ஆறுதல் - நிலைத்து நிற்றல்
18) காலூன்றல் - துன்பத்தில் உதவுதல்
19) கை தூக்குதல் - உதவி செய்தல்
20) கை நாங்குதல் - சிவனத்தை கெடுத்தல்
21) உயிர்நிலையடித்தல் - கண்டையிருதல்



# இணைமொழிகள்

01) கையும் மெய்யும் - மிகத் தெளிவாக

02) நகமும் சதையும் - மிக ஒற்றுமை

03) சுற்றும் முற்றும் - எல்லா இடமும்

04) ஆய்ந்து ஓய்ந்து - அவதானமாக

05) ஆடிப்பாடி - சந்தோசமாக

06) வாடிவதங்கி - மிகவும் களைப்புற்று

07) தாறுமாறு - ஒழுங்கையற்றவாறு

08) கண்ணீரும் கம்பலையும் - மிகவும் துன்பமான நிலை

09) சொத்து சுகம் - வசதியான நிலை

10) சீருஞ் சிறப்பும் - உயர்வான நிலை

11) அருமை பெருமை - உயர் நிலை

12) எலும்புந் தோலும் - மிகமெலிந்த

13) ஒட்டி உலர்ந்த - மிக மெலிந்த

14) காய்ந்து கறுத்து - மிகக் கறுத்து

15) தப்பித்தவறி - தவறுதலாக

16) திட்டவட்டமாக - உறுதியாக

17) துணி மணி - உடைகள்

18) காரசாரமாய் - கடுமையாக

19) அருமை பெருமை - உயர்நிலை

20) எலும்புந் தோலும் - மிகமெலிந்த

# ஆத்திசூடி

1) அறம் செய விரும்பு
2) ஆறுவது சினம்
3) இயல்வது கரவேல்
4) ஈவது விலக்கேல்
5) உடையது விளம்பேல்
6) ஊக்கமது கைவிடேல்
7) எண்ணெழுத்து இகழேல்
8) ஏற்பது இகழ்ச்சி
9) ஐயம் இட்டு உண்
10) ஒப்புரவு ஒழுகு
11) ஓதுவது ஒழியேல்
12) ஔவியம் பேசேல்
13) அஃகம் சுருக்கேல்
14) கண்டு ஒன்று சொல்லேல்
15) ஙப்போல் வளை
16) சனி நீர் ஆடு
17) ஞயம்பட உரை
18) இடம்பட வீடு எடேல்
19) இணக்கம் அறிந்து இணங்கு
20) தந்தை தாய் பேண்
21) நன்றி மறவேல்
22) பருவத்தே பயிர்செய்
23) மண்பறித்து உண்ணேல்
24) இயல்பு அலாதன செய்யேல்
25) அரவம் ஆட்டேல்
26) இலவம் பஞ்சில் துயில்
27) வஞ்சகம் பேசேல்
28) அழகலாதன செய்யேல்
29) இளமையில் கல்
30) அறனை மறவேல்
31) அனந்தல் ஆடேல்
32) கடிவது மற
33) காப்பது விரதம்
34) கிழமைப்பட வாழ்

35) கீழ்மை அகற்று

36) குணமது கைவிடேல்

37) கூடிப்பிரியேல்

38) கெடுப்பது ஒழி

39) கேள்வி முயல்

40) கைவினை கரவேல்

41) கொள்ளை விரும்பேல்

42) கோதாட்டு ஒழி

43) கௌவை அகற்று

44) சக்கர நெறி நில்

45) சான்றோர் இனத்து இரு

46) சித்திரம் பேசேல்

47) சீர்மை மறவேல்

48) சுளிக்கச் சொல்லேல்

49) சூது விரும்பேல்

50) செய்வன திருந்தச்செய்

51) சேரிடம் அறிந்து சேர்

52) சையெனத் திரியேல்

53) சொற் சோர்வு படேல்

54) சோம்பித்திரியேல்

55) தக்கோன் எனத்திரி

56) தானமது விரும்பு

57) திருமாலுக்கு அடிமைசெய்

58) தீவினை அகற்று

59) துன்பத்திற்கு இடம்கொடேல்

60) தூக்கி வினை செய்

61) தெய்வம் இகழேல்

62) தேசத்தோடு ஒத்து வாழ்

63) தையல் சொல்கேளேல்

64) தொன்மை மறவேல்

65) தோற்பன தொடரேல்

66) நன்மை கடைப்பிடி

67) நாடு ஒப்பன செய்

68) நிலையில் பிரியேல்

69) நீர்விளையாடேல்

70) நுண்மை நுகரேல்

# புதிய ஆத்திசூடி

01) அச்சந்தவிர்
02) ஆண்மை தவறேல்
03) இளைத்தல் இகழ்ச்சி
04) ஈகை திறன்
05) உடலினை உறுதிசெய்
06) ஊண்மிக விரும்பு
07) எண்ணுவதுயர்வு
08) ஏறுபோல் நட
09) ஐம்பொறி ஆட்சிகொள்
10) ஒற்றுமை வலிமையாம்
11) ஓய்தலொழி
12) ஔடதங்குறை
13) கற்றதொழுகு
14) காலம் அழியேல்
15) கிளைபல தாங்கேல்
16) கீழோர்க்கு அஞ்சல்
17) குன்றென நிமிர்ந்து நில்
18) கூடித்தொழில் செய்
19) கெடுப்பது சோர்வு
20) கேட்டிலும் துணிந்து நில்
21) கைத்தொழில் போற்று
22) கொடுமையை எதிர்த்
23) கோல்கைக் வாழ்
24) கவ்வியதை விடல்
25) சரித்திரத் தேர்ச்சி
26) சாவதற்கு அஞ்சேல்
27) சிதையா நெஞ்சு கொள்
28) சீறுவோர்ச் சீறு
29) சுமையை இளைத்திடல்
30) சூரரைப் போற்று
31) செய்வது துணிந்து
32) சேர்க்கை அழியேல்
32) சைகையிற் பொருளுணர்
33) சொல்வது தெளிந்துசெல்
34) சோதிடந் தனையிகழ்
35) சௌரியந் தவறேல்
36) ஞமலிபோல் வாழேல்
37) ஞாயிறு போற்று
38) ஞன்மை அழியேல்
39) ஞிமிரென இன்புறு
40) ஞெகிழ்வ தருளின்

# இரட்டைக்கிளவி.

| இரட்டைக்கிளவி | உணர்த்தும் கருத்து |
| --- | --- |
| பளபள | மின்னுதல் |
| வழவழ | வழுவாக |
| கலகல | சிரித்தல் |
| மளமள | கண்ணில் நீர் வடிதல் |
| கடுகடு | கோபமாக பேசுதல் |
| சலசல | நீர் ஓடும் ஓசை |
| கிசுகிசு | சிரித்தல் |
| குளுகுளு | இதமான காற்று / குளிர் |
| கடகட | வண்டி செல்லும் ஓசை |
| நறநற | பல்லைக் கடித்தல் |
| சிடுசிடு | கோபமான பேச்சு / முகம் |
| படபட | துடித்தல் |
| மொழுமொழு | வளர்ச்சி |
| டாண் டாண் | மணி ஓசை |
| கணீர் கணீர் | மணி ஓசை |
| பொலபொல | கண்ணில் நீர் வடிதல் / பொழுது விடிதல் |
| தகதக | மின்னுதல் |
| பளார் பளார் | கன்னத்தில் அறைதல் |
| திகுதிகு | எரித்தல் |
| சுர் சுர் | உரைத்தல் |
| சுறுசுறு | உழைத்தல் |
| விண் விண் | வலித்தல் |
| கிடுகிடு | அச்சம் |
| கமகம | மணம் வீசுதல் |
| விசுக் விசுக் | வேகமான நடை |
| சடசட | முறிதல் |
| சடார் சடார் | காற்று வீசுதல் |
| திடுதிடு | மழைவான கூட்டம் |

# பழமொழிகள்

1) அழுத பிள்ளை பால் குடிக்கும்.
முயற்சி செய்தவர் பலன் பெறுவார்.

2) ஆழம் அறியாமல் காலை விடாதே.
எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

3) ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
மரணத்திற்கு காலம் இல்லை.

4) ஆனைக்கும் அடி சறுக்கும்.
பெரியவர்களும் தவறு விடலாம்.

5) ஆசை வெட்கம் அறியாது.
ஆசை சகலதையும் மறக்கச் செய்யும்.

6) அடியாத மாடு பணியாது.
தண்டனையின் முக்கியத்துவம்.

7) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
உதவி செய்தவரை மறக்கக் கூடாது.

8) சூடு கண்ட பூனை அடுப்படியை நாடாது.
அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.

9) கிட்டாதாயின் வெட்டென மற.
கிடைப்பதற்கு அரிதான ஒன்றை மறப்பது நல்லது.

10) சிறுதுரும்பும் பல் குத்த உதவும்.
எதையும் குறைவாக பேசக் கூடாது.

11) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
ஒற்றுமையே மிகப் பெரிய பலம்.

12) முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்
தெண்டித்தவர் வெற்றி பெறுவார்.

# பொன் மொழிகள்

1) கண்ணுக்குத் தெரிவதெல்லாம் உண்மை இல்லை
உண்மைகள் யாவும் கண்ணிற்கு தெரிவதில்லை.

2) வாய்ப்பு தானாக வருவதில்லை மனிதன்
தானே உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும்.

3) பொறுமை மிகவும் துன்பமானது
அதன் விளைவோ மிகவும் இனிமையானது

4) ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை
ஆளும் முறையில் தான் உள்ளது

5) ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை
ஆளும் முறையில் தான் உள்ளது.

6) உண்மை எப்பொழுதும் சூரிய ஒளி போன்றது
அதை யாரும் மூடி மறைக்க முடியாது

7) கல்வியின் மகத்தான தேடல் கற்பதல்ல!
தேடல் அறிவு அல்ல செயல்,

8) நீ செல்ல வேண்டும் என்பதற்காகத்தான்
பூமி உன் காலடியில் கிடக்கிறது.

9) தவறை மன்னிக்கும் குணம் ஒருவனின்
உயர்ந்த பண்பாட்டை காட்டுகிறது

10) யாரும் தோற்பதற்கு திட்டமிடுவதில்லை
திட்டமிடாததால் தான் தோற்றுவிடுகிறார்கள்

11) அன்பால் உலகை ஆளலாம்
வெறுத்தால் இழந்து போகலாம்

12) மற்றவர் உங்களை புகழ வேண்டும் என்பதற்காக
மட்டும் தானம் செய்யாதீர்கள்

13) ஒரு நல்ல தாய் நூறு
ஆசிரியர்களுக்கு சமமானவள்.

# திருக்குறள்

அறவியல் அதிகாரம் => 40

## கல்வி

1) கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

2) எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

3) கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்

4) உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

5) உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லாதவர்

6) தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு

7) யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாதவாறு

8) ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து

9) தாம் இன்புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

10) கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்ற யாவை.

# திருக்குறள்

இல்லறவியல் — அதிகாரம் 11

## செய்ந்நன்றி அறிதல்

1) செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றலரிது

2) காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது

3) பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

4) தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவர்

5) உதவி வரைத்தன்று உதவி உதவி செய்யப்பட்டார்
சால்பின் வரைத்து

6) மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

7) எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு

8) நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

9) கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்று நன்றுள்ளக் கெடும்

10) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

# அடுக்குத்தொடர்

01) அணி அணி

02) உயர உயர

03) ஏறி ஏறி

04) கரிய கரிய

05) சிரித்துச் சிரித்து

06) சிறுகச் சிறுக

07) சுடச் சுட

08) சுற்றிச் சுற்றி

09) தேடித் தேடி

10) நடுங்கி நடுங்கி

11) வழி வழி

12) மெல்ல மெல்ல

13) கற்றை கற்றை

14) கதறிக் கதறி

15) ஓட ஓட

16) ஆடி ஆடி

17) அகுதகுத

18) பாடிப் பாடி

19) குமுறிக் குமுறி

20) பெரிய பெரிய



# விடுகதைகள்

1) வரும் போது வெண் சிவப்பு வளர வளர தகதகப்பு போகும்போது கருஞ்சிவப்பு அது என்ன?

*) சூரியன்

2) மழைக் காலம் வந்துவிட்டால் மகராசி பாட்டுப்பாடுவாள் அவள் யார்?

*) தவளை

3) சிறகை இல்லாத காவலாளி சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?

*) நாய்

4) நிற்காமல் ஓடுபவனை துரத்திப்பிடிக்க ஆளில்லை அவன் யார்?

*) ஆறு

5) தன்னிடம் சேருபவனை தன்னைப் போலவே மாற்றுவான் அவன் யார்?

*) பால்

6) தீக் குளித்து சாகிறவன் காற்றுக்கு இறந்தும் சாவான் அவன் யார்?

*) கற்பூரம்

7) சின்ன வாயன் வெட்டுவிட்ட உணவை ஜீரணம் செய்யாமல் வைத்திருப்பவன் அவன் யார்?

*) உண்டியல்

8) வில்லாய் வளைபவன் ஒரு போதும் ஒடிந்து போக மாட்டான் அவன் யார்?

*) நாணல்

9) இரண்டு கால்கள் இருப்பவனை ஊனாமல் பிடித்துக் கொள்ள வேண்டும் அவன் யார்?

*) ஏணி

10) கண்டம் செம்பால் தண்ணீர் இருந்தும் குடிக்க வழி இல்லை அது என்ன?

*) கடல்நீர்

# பொது அறிவு

01. மனித இரத்தத்தின் வெப்பநிலை எவ்வளவு?
37° செல்சியஸ்

02. ஈர்ப்பு விசையின் தத்துவத்தை விளக்கியவர் யார்?
நியூட்டன்

03. எலியின் சிறுநீரால் பரவும் நோய் எது?
எலிக்காய்ச்சல்

04. அன்னை தெரசா பிறந்த ஆண்டு எது?
1910.

05. 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் நட்சத்திரம் எது?
ஹேலிஸ்காமட்

06. வண்ணத்துப் பூச்சி எத்தனை வாரம் உயிர் வாழும்?
4 வாரம்

07. மைக்ரோவேவ் அடுப்பை கண்டு பிடித்தவர் யார்?
பெர்சி ஸ் பென்சர்

08. சீனப் பெருஞ்சுவரை எழுப்பிய அரசர் யார்?
ஷிங் ஹவாங்டி

09. அரபிக்கடலில் சங்கமாகும் நதி எது?
நர்மதா

10. பூப் பூக்காத மரம் எது?
பலாமரம்.

11. நீலத்திமிங்கலத்தின் நீளம் யாது?
30 மீற்றர்.


12. போக்குவரத்து காவலர்கள் இல்லாத நாடு எது?
நியூஸிலாந்து.

13. கோவாவின் உயிர்நாடி என சிறப்பித்து பேசப்படும் நதி?
மண்டோவி

# முக்கியமான மூன்று

1. விரும்ப வேண்டிய மூன்று
   கருணை, நற்குணம், மன அமைதி
2. ஒழிக்க வேண்டிய மூன்று
   திருட்டு, சோம்பல், பொய்
3. ஆதரிக்க வேண்டிய மூன்று
   வாக்குறுதி, நட்பு, பண்பு
4. கவனிக்க வேண்டிய மூன்று
   பேச்சு, நடைமுறை, செயல்கள்
5. அடக்க வேண்டிய மூன்று
   நா, வேதனை, சோம்பல்
6. தவிர்க்க வேண்டிய மூன்று
   புகைத்தல், மது அருந்தல், சூதாடல்
7. போற்ற வேண்டிய மூன்று
   அறிவு, அழகு, பண்பு
8. நேசிக்க வேண்டிய மூன்று
   நேர்மை, தூய்மை, கடின உழைப்பு
9. வெறுக்க வேண்டிய மூன்று
   பெருமை, அநீதி, வாக்குமீறல்
10. பேணி வளர்க்க வேண்டிய மூன்று
    திருப்தி, தைரியம், மன மகிழ்ச்சி
11. அஞ்ச வேண்டிய மூன்று
    களவு, கோள், பொய்

# கடிதத்தின் அமைப்பு




1 :- முகவரியும், திகதியும்


2 :- விளிப்பு

3அ :- சுகம் விசாரித்தல்

ஆ :- செய்தி

4 :- முடிப்பு

5 :- ஒப்பம்.



# எதிர்ப்பாற் சொற்கள்

1. அரசன் - அரசி
2. அழகன் - அழகி
3. அடியான் - அடியாள்
4. அரக்கன் - அரக்கி
5. ஆசிரியன் - ஆசிரியை
6. கணவன் - மனைவி
7. எசமான் - எசமாட்டி
8. உழவன் - உழத்தி
9. இவன் - இவள்
10. இறைவன் - இறைவி
11. இயக்கன் - இயக்கி
12. கள்வன் - கள்ளி
13. காவற்காரன் - காவற்காரி
14. செல்வன் - செல்வி
15. தபுதாரன் - விதவை
16. கொல்லன் - கொல்லச்சி
17. குரு - குருத்தினி
18. குயவன் - குயத்தி
19. காவற்காரன் - காவற்காரி
20. குமரன் - குமரி
21. கிழவன் - கிழவி
22. கோமான் - கோமாட்டி
23. கூனன் - கூனி
24. கூத்தன் - கூத்தி
25. தச்சன் - தச்சிச்சி
26. தமிழன் - தமிழிச்சி
27. தனவான் - தனவதி
28. தாதன் - தாதி
29. திருவாளன் - திருவாட்டி
30. திருடன் - திருடி
31. தேவன் - தேவி
32. நடிகன் - நடிகை
33. பிரான் - பிராட்டி
34. பாணன் - பாடினி
35. பண்டிதன் - பண்டிதை
36. நிபுணன் - நிபுணை
37. பக்தன் - பக்தை
38. பாங்கன் - பாங்கி
39. பகவான் - பகவதி
40. இறைவன் - இறைவி
41. பாலகன் - பாலகி
42. பாடகன் - பாடகி
43. தாசன் - தாசி
44. தனவான் - தனவதி
45. சீமான் - சீமாட்டி
46. ஞானவான் - ஞானவதி
47. சங்கரன் - சங்கரி

# கலைச் சொற்கள்

01) Aeroplane - விமானம்
02) Adaptation - இசைவாக்கம்
03) Airhostess - விமானப் பணிப்பெண்
04) Airport - விமான நிலையம்
05) Avaiation - வான்வழிப் போக்குவரத்து
06) Compass - திசையறி கருவி
07) Experiment - பரிசோதனை.
08) Microphone - ஒலிவாங்கி
09) Microscope - நுணுக்குக்காட்டி
10) Nervous system - நரம்புத்தொகுதி
11) Automatic - தானியங்கி
12) pilot - விமானி
13) spectrun - நிறமாலை
14) Telescope. - தொலைநோக்கி
15) Birds sanctuary. - பறவைகள் சரணாலயம்
16) Products - விளைவுகள்
17) Reactants - தாக்கிகள்
18) Freesing - உறைதல்
19) Melting - உருகல்
20) Rusting - துருப்பிடித்தல்

# பயனுள்ள கல்வி

மதுரையில் பண்டிதர் சுந்தரராசனார் என்னும் அறிஞர் ஒருவர் இருந்தார். அவர் சமய சாத்திரங்களை எல்லாம் நன்கு கற்றவர். படித்தோர் மத்தியில் புகழ் பெற்றவர். புராணங்கள், இதிகாசங்கள் எல்லாம் அவருக்கு மனப்பாடம் மிக்க திறமையாகப் பேசுவார். இதன் காரணமாக அறிஞர்கள் பலர் அவரைப் பல இடங்களுக்கும் பேசுவதற்கு அழைப்பார்கள். ஊர்மக்கள் எல்லாம் அவரது அறிவுத் திறனைக் கண்டு அதிசயிப்பதும் உண்டு. தன் அறிவில் அவருக்கு அளவிற்கு மீறிய செருக்கும் இருந்தது.

ஒருநாள் வயலூரில் உள்ள ஆலயம் ஒன்றில் பேசுவதற்கு சுந்தரனாரை அழைத்திருந்தார்கள். அங்கு செல்வதற்கு அவரும் விரும்பினார். மதுரையில் இருந்து வயலூர் செல்லும் பாதையில் ஆறு ஒன்று உண்டு. அந்த ஆற்றைக் கடப்பதற்காக பண்டிதர் படகுத் துறையை வந்து சேர்ந்தார். படகுக்காரன் ஒருவனைக் கூப்பிட்டார். அவன் படகுக் கூலியாகப் பத்து ரூபா தரும்படி கேட்டான். பண்டிதரும் சம்மதித்துப் படகில் ஏறிக்கொண்டார்.

படகில் படகோட்டியுடன் பண்டிதர் மட்டுமே பயணம் செய்தார். சிறிய படகில் பயணம் செய்வது பண்டிதருக்கு பயத்தை விளைவித்தது. என்றாலும் மனதை தேற்றிக் கொண்டார். பயத்தைப் போக்க படகுக்காரனுடன் உரையாடத் தொடங்கினார். தான் மிகவும் படித்தவர் என்பதையும் படகுக்காரனுக்கு கூற விரும்பினார். எனவே படகுக்காரனைப் பார்த்து "மகனே! வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டும்". எவ்வளவு சாத்திரங்களை கற்க முடியுமோ அவை அத்தனையையும் கற்க வேண்டும். அதுதான் நமது குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றார்.

பின்னர் அவனைப்பார்த்து நீ என்னென்ன சாத்திரங்கள் கற்றுள்ளாய் எனக் கேட்டார். படகுக்காரனோ படிப்பறிவில்லாதவன் பள்ளிக்கூடம் போகாதவன். எனவே அவன் மிகப் பணிவோடு ஐயா நான் கல்வி அறிவு அற்றவன். அனுபவ அறிவு உண்டு. கடவுள் மீது பக்தியோடு தினமும் வணங்குவேன் என்றான்.

அது போதாது, வேதங்களையாவது படித்திருக்கிறாயா? என்று கேட்டார் பண்டிதர். படகுக்காரனுக்கு பண்டிதரின் கேள்வி திகைப்பை அளித்தது. அப்படி ஒரு பெயரை நான் கேள்விப்பட்டதே இல்லை. ஐயா! என்றான் படகுக்காரன்.

அப்படியானால் உன் வாழ்நாளில் கால்பங்கை வீணடித்து விட்டாய். நான் வேத சாஸ்திரங்களைக் கற்றுத் தேற பத்து வருடங்கள் ஆயின. இன்று என்னைப் போல் வேதவிற்பன்னர் யாரும் இல்லை. சரி, போகட்டும் வேதங்களைப் படித்து விட்டாய். பகவத்கீதையாவது படித்து விட்டாயா? என்று வினவினார் பண்டிதர். படகுக்காரனுக்குப் பகவத்கீதையைப் பற்றி எதுவுமே தெரியாது. அவன் மிக்க வெட்கத்துடன் ஐயா! கீதையைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது என்றான். அந்த பதிலைக் கேட்ட பண்டிதர் பலமாக சிரித்தார்.

படகு ஆற்றின் நடுப்பகுதியை அடைந்து கொண்டிருந்தது. அலைகளின் உக்கிரத்தால் படகு ஆட்டம் கொடுக்கத் தொடங்கியது. கதைத்துக் கொண்டே இருந்தார். அவர் படகுக் காரனைப் பார்த்து சரிசரி போனது போகட்டும்.

மகனே! உனக்காக நான் மிக்க வருத்தப்படுகிறேன். உன் வாழ்க்கையில் முக்கால் பகுதியை வீணடித்து விட்டாய். எஞ்சியுள்ள கால்பகுதி காலத்திலாவது ஏதாவது நல்ல விடயங்களை கற்றுக் கொள் என்றான். அவன் கூறியதைக் கேட்ட படகுக்காரன் மிக்க கவலையுடன் காணப்பட்டான்.

வாழ்க்கைக்குப் பயன்படுவதுதான் உண்மையான கல்வி.

கர்வம் கொள்வது கற்றோருக்கு அழகல்ல.

உண்மையான கல்வி என்றும் பணிவினையே


தோற்றுவிக்கும்.

# எலிக்குஞ்சு பார்த்த விலங்குகள்

ஒரு நாள் ஓர் எலிக்குஞ்சு முதல் முறையாக வளையை விட்டு வெளியே வந்தது. அது தனது வழியில் இரண்டு புதிய பிராணிகளை பார்த்தது. முதலில் பார்த்தது உயரமாக இருந்தது. அதற்கு இரண்டே கால்கள் இருந்தது. அதன் தலையின் உச்சியிலும் தாடையின் கீழும் சிவப்பாய் இருந்தது. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போது அது கூச்சல் போட்டது. அதைக் கேட்டு எலிக் குஞ்சு பயந்தது. அது இரண்டாவது பார்த்த விலங்கு மிகவும் சாதுவாக இருந்தது. அதன் உடல் முழுவதும் உரோமம் மிகவும் சாந்தமாக இருப்பது போல தெரிந்தது. அதனால் அதனுடன் நட்புக் கொள்ள எலிக்குஞ்சு தீர்மானித்தது. இரவு எலிக்குஞ்சின் தாய் தன் வளைக்குத் திரும்பியது. தான் பார்த்த விலங்குகளை பற்றி எலிக்குஞ்சு தாய் எலியிடம் விவரித்தது. தாய் எலி மகனே நீ பார்த்தது சேவல் அதனால் நமக்கு எவ்வித தீங்கும் நேராது. ஆனால் இரண்டாவது பார்த்தது பூனை நல்லது போல பாசாங்கு செய்து நம்மை கண்டால் கடித்து விடும் நீ வெறுத்தது சேவல் ஆனால் உன்னைப் பூனையிடமிருந்து காப்பாற்றியது சேவல் தான். அதனால் உருவத்தைப் பார்த்து இனிமேல் ஏமாறக் கூடாது.

உருவத்தை பார்த்து எதையும் தீர்மானிக்காதே.

RW 20/3/17


អរគុណ
Thank You.